

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (10.2.2025) ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்ட வி.சி. சந்திரகுமார் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி உடன் உள்ளார்.

### 6 மாதத்தில் பட்டா! ஏழை – எளிய மக்களின்

# 63 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சிப் பதிவு!

சென்னை, பிப்.11-

**ஏழை, எளிய மக்களின் 63 ஆண்டு காலப் பிரச்சினைக்குத் தீர்வாக 6 மாதத்தில் அரசு பட்டாக்கள் வழங்கி சாதனை படைக்கும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சி பொங்க குறிப்பிட்டுள்ளார்.**

நேற்று (10.02.2025) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

ஏழை, எளிய மக்களின் 63 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு!

சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களின் “பெல்ட் ஏரியாக்களில்” ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் 29,187 பேர்,

மதுரை, நெல்லை உள்ளிட்ட மாநகராட்சிகள் நகராட்சிகள் மாவட்டத் தலைநகரப் பகுதிகளில் 57,084 பேர் என மொத்தம் 86 ஆயிரம் ஏழை, எளிய மக்களுக்குப் பட்டா வழங்க இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளோம்!

6 மாதங்களில் இதனைச் செய்துமுடிக்க இரண்டு குழுக்களையும் அமைக்கவுள்ளோம்!

உங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 12,29,372 பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, பிப். 11 -

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநதி எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு - மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.2.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில், சர். பிட்டி தியாகராயர் அரங்கில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணா நதி, தியாக ராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. தங்களது முன்னிலையில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: 01.03.2025 - சனிக்கிழமை அன்று முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநதி எம்.எல்.ஏ, தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை தலைமைச் செயலகத்தில் – மகளிர் சுயஉதவிக் குழுக்களின்

# உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் ‘மதி அனுபவ அங்காடி!’

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப். 11-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் மதி அனுபவ அங்காடியினை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடையவேண்டும் என்பதற்காக 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்தார். மகளிரின் முன்னேற்றத்திற்காக, துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தியதின் காரணமாக பிற மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஒரு முன்னோடி திட்டமாக விளங்குகிறது.

முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில, மாவட்ட, வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம் மற்றும் இயற்கைச் சந்தைகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் காரணமாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, “மதி அனுபவ அங்காடி” (MATHI Experience Store) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் துணை முதலமைச்சர் அவர்களால் 18.11.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் தயாரிப்புப் பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்து, வருமானம் ஈட்டுவது மதி அனுபவ அங்காடியின் தனிச் சிறப்பு. இந்த மதி அனுபவ அங்காடியில் தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மதி அனுபவ அங்காடிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பினைத் தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் இரண்டாவது மதி அனுபவ அங்காடியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2025) துவக்கி வைத்தார்.

இந்த மதி அனுபவ அங்காடியில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிரால் உற்பத்தி செய்யப்படும் “மதி” என்ற வணிக முத்திரையுடன் கைவினைப் பொருட்கள், கைத்தறி துணிகள், தேன், நாட்டுச்சர்க்கரை, சிறுதானிய உணவு பொருட்கள், அலங்கார பொருட்கள், ஆபரணங்கள், சிலைகள், உணவுப் பொருட்கள், சிறுதானியங்கள் மற்றும் வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள் உள்பட அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

